In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 78/2023 | Prosecution witness P.W.1 |
| Name: Rajalakshmi | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 02.03.2026.

**(Accused 1 and 2 present.**

முதல் விசாரணை :–

நான் அதிகாரிபட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 11 ஆண்டுகளாக ஊர்க்காவல் படையில் பணியாற்றி வருகிறேன். 26.06.2022 ம் தேதி ஊர்க்காவல்படையைச் சேர்ந்த நான் உள்பட 10 பேர் திண்டுக்கல்லில் இருந்து ஈச்சர் வண்டி மூலமாக விருவீடு சென்றோம். விருவீடு காவல் நிலையத்தில் நாங்கள் வந்ததை பதிவு செய்துவிட்டு அங்கிருந்து நடகோட்டை என்ற ஊருக்கு பந்தோபஸ்த்துக்காக சென்றோம். ஈச்சர் வண்டி எண்.TN–57–G–0697 என்ற வாகனத்தில் சென்றோம். வாகனத்தை சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பழனிச்சாமி என்பவர் ஓட்டினார். வத்தல்பட்டி என்ற பஸ்ஸ்டாப் அருகில் வண்டியை பழனிச்சாமி, சிறப்பு சார்பு ஆய்வாளர் நிறுத்தியபோது யாரோ கல்லைக்கொண்டு எறிந்ததில் ஈச்சர் வண்டியின் பின்பக்க கண்ணாடி உடைந்து வண்டிக்குள் விழுந்தது. அந்த கல் என் தோள்பட்டையிலும், முதுகிலும் பட்டு வலி ஏற்பட்டது. பின்னர் நாங்கள் எல்லோரும் கீழே இறங்கி பார்த்தபோது எதிரிகள் இருவரும் அந்த இடத்தில் இருந்தார்கள். அவர்களிடம் ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டதற்கு அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தை ஈச்சர் வண்டி மோதிவிட்டதாகச் சொன்னார்கள். மேலும் கெட்டவார்த்தைகளால் பேசினார்கள். பின்னர் நான், கவிப்பிரியா, கவிதா, குமரேசன் ஆகியோர்கள் பஸ்ஸில் ஏறி

விருவீடு காவல்நிலையம் சென்று நடந்ததை சொல்லி நான் புகார் கொடுத்தேன். அந்த புகார்தான் என்னிடம் காண்பிக்கப்படுவதாகும். அந்த புகார் அதசாஆ.1. பின்னர் காயம்பட்ட என்னை வத்தலக்குண்டு அரசு மருத்துவமனை சென்று முதல் சிகிச்சை பெற்றுவிட்டு பின்னர் திண்டுக்கல் அரசு மருத்துவனைக்கு சென்றேன். நான் அங்கு சென்று நுண்கதிர்ப்படம் எடுக்கவில்லை. அப்படியே வீட்டுக்கு சென்றுவிட்டேன். என்னை போலீசார் விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

நான் கொடுத்த புகாரில் சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி எதிரிகள் வந்த இருசக்கர வாகனத்தில் மோதியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் நம்பர் எனக்குத் தெரியாது. எஸ்.எஸ்.ஐ. பழனிச்சாமி குடிபோதையில் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் எனக்குத் தெரியாது. எஸ்.எஸ்.ஐ. பழனிச்சாமி குடிபோதையில் வாகனத்தை ஓட்டி வந்து எதிரிகள் வந்த இருசக்கர வாகனத்தில் மோதியதில் 2ம் எதிரி மற்றும் அவரது தம்பி பிரகாஸ் ஓடையில் தூக்கி எறியப்பட்டார்கள் என்றும் சிறப்பு சார்பு ஆய்வாளரை காப்பாற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி மீது புகார் பதிவு செய்யப்பட்டது எனக்குத் தெரியாது. அவர் மீது குற்ற எண்.137/2022 u/s 279, 337 IPC ன் கீழ் 26.06.2022ம் தேதி விருவீடு காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. என்னுடன் அன்றைய தினம் 10 நபர்கள் வந்ததாக சொல்லியுள்ளேன், அவர்கள் யார் யார் என்றால் இவர்கள் நால்வர் பெயர் மட்டும்தான் எனக்கு தெரியும். மற்ற நபர்கள் பெயர் எனக்குத் தெரியாது. இருசக்கர வாகனத்தில் எந்தப்பக்கம் மோதியது என்றால் மோதவில்லை. மோதியதாக எதிரிகள் சொன்னார்கள். கீழே இறங்கி இருசக்கர வாகனத்தை பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. கல்லைக் கொண்டு யார் எறிந்ததாக தெரிந்துகொண்டேன் என்றால் நிலக்கோட்டை

டிஎஸ்பி சார் விசாரித்து சொன்னபிறகுதான் யார் கல்லைக்கொண்டு எறிந்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியவந்தது. சம்பவ இடத்தில் நிறைய நபர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். எவ்வளவு தூரத்தில் இருந்து கல் எறியப்பட்டது என்று நான் பார்க்கவில்லை. மேற்படி விபத்தில் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் அடிபட்டு கீழே விழுந்ததால் 108 ஆம்புலன்ஸ் அங்கு வந்து அவர்களை ஏற்றி உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி குடிபோதையில் ஈச்சர் வண்டியை ஓட்டிவந்து இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும் அதை மறைப்பதற்காகவும் அவரை காப்பாற்றுவதற்காகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாலை 3 மணிக்கு அன்றைய தினம் சம்பவ இடத்திலிருந்து பஸ் ஏறி விருவீடு காவல் நிலையத்திற்கு கால்மணி நேரத்தில் சென்றுவிட்டோம். சம்பவ இடத்திற்கும் விருவீடு காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரமிருக்கும் என்றால் 5 கி.மீ தூரமிருக்கும். புகாரை எழுதிக்கொடுத்தேனா அல்லது காவல் நிலையத்தில் இருநதவர்கள் நான் சொல்லச்சொல்ல எழுதினார்களா என்றால் எனக்கு தோள்பட்டையில் வலி இருந்ததால் என்னால் எழுதமுடியவில்லை. நான் சொல்லச் சொல்ல விருவீடு காவல்நிலைய ஏட்டையா எழுதினார். மாலை 6 மணிக்கு நான் வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். விருவீட்டிலிருந்து வத்தலக்குண்டு ஆஸ்பத்திரிக்கு பஸ்ஸில் போனேன். விருவீட்டில் இருந்து வத்தலக்குண்டிற்கு எத்தனை மணிக்கு பஸ்ஸில் ஏறினேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த இடத்தில் எறியப்பட்ட கல்லைப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். கல்லைக்கொண்டு எதிரிகள் எறியவில்லை என்றும் நான் பொய்யாகச்சொல்கிறேன் என்றும் சம்பவத்தில் எனக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றும் நான் பொய்யாகச்சொல்கிறேன் என்றும் எதிரிகளுக்கும்

இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சிறப்பு சார்பு ஆய்வாளரை பணிநீக்கம் செய்யாமல் இருக்கவேண்டுமென அவர் செய்த குற்றத்தை மறைத்து அவரை காப்பாற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.02 16:21:42 +0530

Principal District Judge,
Dindigul.